இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 ஏ (1) எனும் உறுப்புரையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையின் ஆறாவது அறிக்கை

உள்ளடக்கம்

1. அறிமுகம்.....1

2. அரசியலமைப்புப் பேரவையின் கூட்டங்கள் 1

3. அரசியலமைப்பின் 41 ஆ எனும் உறுப்புரையின் கீழ் அரசியலமைப்புப் பேரவையின் கடமைகளும் பணிகளும்.....1

3.1. பகிரங்க சேவை ஆணைக்குழு 1

3.2. தேசிய பொலிசு ஆணைக்குழு.....2

4. அரசியலமைப்பின் 41இ எனும் உறுப்புரையின் கீழ் பேரவையின் கடமைகள் மற்றும் பணிகள் 2

4.1. பிரதம நீதியரசர் பதவிக்கான நியமனம்.....2

4.2. நீதித் துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்..3

4.3. உயர் நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கான நியமனம் 4

4.4. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிக்கான நியமனம்.....4

4.5. கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவிக்கான நியமனம் 5

5. அரசியலமைப்பைத் தவிர ஏனைய எழுத்துமூலச் சட்டங்களால் அரசியலமைப்புப் பேரவைக்கு விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதல் 6

5.1. தகவலுக்கான உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம் 6

5.2. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம் (PUCSL).....6

5.3. பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம் ...6

5.4. இழப்பீட்டு அலுவலக உறுப்பினர் பதவிக்கான நியமனம் 7

5.5. காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலக உறுப்பினர்கள் பதவிக்கான நியமனம் 8

5.6. நலன்புரி நன்மைகள் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல் 8

5.7. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் சபை உறுப்பினர் பதவிக்கான நியமனம் 9

6. பேரவையின் கடமைகள் மற்றும் பணிகளைச் செய்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான விதிகளை வகுத்தல் 9

7. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழான தகவல் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல் 10

8. உறுப்பினர்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுக்கள் 10

1. அறிமுகம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் (இதன் பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பிடப்படும்) விதிகளின் கீழ், அரசியலமைப்பு மற்றும் ஏனைய சட்டங்களினால் ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் ஆற்றுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அரசியலமைப்புப் பேரவை (இதன் பின்னர் "பேரவை " எனக் குறிப்பிடப்படும்) பணிக்கப்பட்டுள்ளது. 2025 யூலை முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் பேரவையினால் ஆற்றப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள், அரசியலமைப்பின் 41 ஏ (1) எனும் உறுப்புரையின் கீழ் இந்த அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2. அரசியலமைப்புப் பேரவையின் கூட்டங்கள்

ஆய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அரசியலமைப்புப் பேரவை பின்வரும் நாட்களில் பதினான்கு (14) சந்தர்ப்பங்களில் கூடியது:-

09.07.2025, 23.07.2025, 07.08.2025, 12.08.2025, 19.08.2025, 09.09.2025, 24.09.2025, 08.10.2025, 24.10.2025, 21.11.2025, 28.11.2025, 03.12.2025, 05.12.2025, 17.12.2025.

3. அரசியலமைப்பின் 41 ஆ எனும் உறுப்புரையின் கீழ் அரசியலமைப்புப் பேரவையின் கடமைகளும் பணிகளும்

3.1. பகிரங்க சேவை ஆணைக்குழு

அரசியலமைப்பின் 41 ஆ (5) உறுப்புரையின் கீழ் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த ஆணைக்குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு விண்ணப்பங்களைப் பேரவை கோரியிருந்தது. அதற்கமைய, விண்ணப்பதாரர்களின் விபரப் பட்டியலைப் பேரவை பரிசீலித்தபோது, பேராசிரியர் என். செல்வக்குமரன் அவர்களின் இராஜினாமாவினால் ஏற்பட்ட மற்றொரு வெற்றிடத்தைப் பற்றி பேரவைக்கு அறிவிக்கப்பட்டது. எனவே, இது குறித்துக் கலந்துரையாடிய பேரவை, தற்போது பரிசீலனையிலுள்ள பட்டியலின் படியே இரண்டு வெற்றிடங்களையும் நிரப்புவதற்குத் தீர்மானித்தது.

விண்ணப்பதாரர்களைப் குறும்பட்டியல்படுத்திய பின்னர், குறும்பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களைப் பேரவை அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்தது. அதற்கமைய, விண்ணப்பதாரர்களின் தகைமைகள் மற்றும் பொருத்தப்பாடுகளுடன், ஆணைக்குழுவின் கட்டமைப்பில் பால்நிலை உள்ளடங்கலாகப் பல்வகைமையை உறுதிப்படுத்துவதற்கான தேவை மற்றும் பல்வேறு அரச சேவைகளிலிருந்து ஓய்வுபெற்ற

அதிகாரிகளின் பிரதிநிதித்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, அரசியலமைப்பின் 41 ஆ (3) எனும் உறுப்புரையின் கீழ் அரச சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் நிலவும் வெற்றிடங்களுக்கு திரு. லெட்சுமணன் இளங்கோவன் மற்றும் திருமதி சோனாலி நெலும் இளங்ககோன் விஜேரத்ன ஆகியோரைப் பேரவை பரிந்துரைத்தது.

3.2. தேசிய பொலிசு ஆணைக்குழு

திருமதி டி. கே. ரேணுகா ஏகநாயக்க அவர்களின் இராஜினாமாவினால் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்தைப் பற்றிப் பேரவைக்கு அறிவிக்கப்பட்டது. மேலும் அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையின் கீழ் மேற்கொள்ளப்படட இருபத்தொன்றாம் திருத்தத்தை தொடர்ந்து, தேசிய பொலிசு ஆணைக்குழுவிற்கு ஏழு உறுப்பினர்களை நியமிப்பதற்கான அதன் விதப்புரையினையும் பேரவை குறிப்பிட்டிருந்தது.

எனினும், குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட ஏழு நியமித்தர்களில் ஆறுபேரை மாத்திரமே அப்போதைய சனாதிபதி நியமித்திருந்தார் என்பதைப் பேரவை கருத்திற் கொண்டது. எனவே, குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்குப் பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட ஏழாவது நியமித்தரை நியமிக்காததன் விளைவாக ஆக்க அமைவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கும் பொருத்தமான ஒருவரைப் பேரவை விதந்துரைக்கும் என்ற கருத்தைப் பேரவை கொண்டிருந்தது. அதற்கமைவாக குறித்த பதவியிலுள்ள இரண்டு வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான தெரிவுச் செயல்முறையை முன்னெடுப்பதற்கு பேரவை தீர்மானித்தது. பேரவையானது விண்ணப்பதாரர்களை குறும்பட்டியலில் தெரிவு செய்த பின்னர், குறும்பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர்.

விண்ணப்பதாரர்களின் தகைமைகள் மற்றும் பொருத்தப்பாடுகளுடன் பால்நிலை உள்ளடங்கலான பல்வகைமையினை உறுதிப்படுத்தும் தேவைப்பாட்டைக் கருத்திற் கொண்டு, திரு. டொன் தர்ஷன உதய குமார ஹெட்டிஆரச்சி மற்றும் திருமதி புவனேகபாகு படபெதிகே பேமாவதி சிறிவர்தன அபேகுணரத்ன ஆகியோரை அரசியலமைப்பின் 41ஆ(3) எனும் உறுப்புரையின் கீழ் தேசிய பொலிசு ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்குப் பேரவை விதந்துரைத்தது.

4. அரசியலமைப்பின் 41இ எனும் உறுப்புரையின் கீழ் பேரவையின் கடமைகள் மற்றும் பணிகள்

4.1. பிரதம நீதியரசர் பதவிக்கான நியமனம்

தற்போதைய பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம்.என்.பி. பர்னாந்து. அவர்களின் திட்டமிட்ட ஓய்வைத் தொடர்ந்து, உயர் நீதிமன்ற நீதியரசர் கௌரவ பீ.பீ.

சூரசேன அவர்களை 2025.07.27 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பிரதம நீதியரசர் பதவிக்கு நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை கருத்திற் கொண்டது.

கௌரவ நீதியரசர் பீ.பீ. சூரசேன தற்போது உயர் நீதிமன்றத்தின் மிகவும் சிரேஷ்ட நீதியரசராக உள்ளார் என்பதுடன் அவர் தனது தொழில்வாழ்க்கையில் களங்கமெதுவுமின்றிக் கடமையாற்றியுள்ளார் என்பதையும் பேரவை அவதானித்தது. அதற்கமைய, தற்போதைய பிரதம நீதியரசர், சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம்.என்.பி. பர்னாந்து அவர்களின் திட்டமிட்ட ஓய்வு பெறுதலைத் தொடர்ந்து, உயர் நீதிமன்ற நீதியரசர் கௌரவ பீ.பீ. சூரசேன அவர்களை 2025.07.27 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அரசியலமைப்பின் 41இ(1) எனும் உறுப்புரையின் கீழ் பிரதம நீதியரசர் பதவிக்கு நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை அங்கீகரித்தது.

4.2. நீதித் துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

4.2.1. 2025.06.17 அன்று கௌரவ நீதியரசர் ஈ.ஏ.ஜீ.ஆர். அமரசேகர ஓய்வு பெற்றமையினால் நீதித் துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு உயர் நீதிமன்ற நீதியரசர் கௌரவ எம்.ஏ.சமயவர்தன அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது.

அரசியலமைப்பின் 111ஈ(2) எனும் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறாக நீதவானாக அல்லது மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய அனுபவம் கொண்ட உயர் நீதிமன்றத்தின் மிகவும் சிரேஷ்ட நீதியரசரைக் கொண்டு நீதித் துறைச் சேவை ஆணைக்குழுவை அமைக்க வேண்டிய தேவைப்பாட்டைப் பேரவை கருத்திற் கொண்டது.

உயர் நீதிமன்ற நீதிபதி, கௌரவ நீதியரசர் எம். ஏ. சமயவர்தன அவர்கள் தற்போது, நீதவானாக அல்லது மாவட்ட நீதிபதியாக அனுபவம் கொண்ட மிகவும் சிரேஷ்ட நீதிபதி என்பதைப் பேரவை அவதானித்தது. அதற்கமைவாக, அரசியலமைப்பின் 41இ மற்றும் 111ஈ எனும் உறுப்புரைகளின் ஏற்பாடுகளைப் பரிசீலித்ததன் பின்னர், 2025.06.17 முதல் வெற்றிடமாகியுள்ள நீதித் துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு, உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ எம். ஏ. சமயவர்தன அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை அங்கீகரித்தது.

4.2.2. பிரதம நீதியரசர் பதவிக்கு கௌரவ பி. பி. சூரசேன அவர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து, வெற்றிடமான நீதித் துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ நீதியரசர் எஸ். துரைராஜா, சனாதிபதி சட்டத்தரணி, அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது.

கௌரவ நீதியரசர் எஸ். துரைராஜா, சனாதிபதி சட்டத்தரணி, அவர்கள் தற்போது உயர் நீதிமன்றத்தின் மிகவும் சிரேஷ்ட நீதியரசர் ஆவார் என்பதைப் பேரவை அவதானித்தது. அதற்கமைவாக, அரசியலமைப்பின் 41இ (1) மற்றும் 111ஈ (1) எனும் உறுப்புரைகளின் கீழ், குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ நீதியரசர் எஸ். துரைராஜா, சனாதிபதி சட்டத்தரணி, அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை அங்கீகரித்தது.

4.3. உயர் நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கான நியமனம்

உயர் நீதிமன்ற நீதிபதிப் பதவியில் நிலவும் வெற்றிடம் ஒன்றிற்காக, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கௌரவ நீதியரசர் கே. எம். ஜீ. எச். குலதுங்க அவர்களை நியமிப்பதற்கு, அரசியலமைப்பின் 41இ(1) எனும் உறுப்புரையின் கீழ், கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது.

அதற்கமைவாக, அரசியலமைப்பின் 41இ(1) எனும் உறுப்புரையின் கீழ், உயர் நீதிமன்ற நீதிபதிப் பதவிக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கௌரவ நீதியரசர் கே. எம். ஜீ. எச். குலதுங்க அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை அங்கீகரித்தது.

4.4. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிக்கான நியமனம்

பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவியிலிருந்து திரு. டி. எம். டபிள்யூ. டீ. தென்னக்கோன் அவர்கள் நீக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்காக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவிக்காக தற்போது பதில் கடமைபுரியும் சிரேஸ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, திரு. டபிள்யூ. எல். ஏ. எஸ். பிரியந்த அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது.

பேரவையின் பரிசீலனைக்காக, பிரதிவாதி ஒருவராக நியமத்தரைக் குறிப்பிட்டு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுக்கள் மற்றும் ஏற்கனவே முடிவுற்றுள்ள வழக்குகள் உள்ளிட்ட நியமத்தருக்கு எதிராக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஏதேனும் வழக்குகள் தொடர்பில் கௌரவ சட்டத்துறை தலைமையதிபதியிடமிருந்து அறிக்கை ஒன்றைப் பெறுவதற்கும் பேரவை தீர்மானித்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடமிருந்து நியமத்தர் தொடர்பான குற்றங்கள் பற்றிய கடந்தகாலப் பதிவுகள், ஒழுக்காற்று விடயங்கள் மற்றும் ஏதேனும் முறைப்பாடுகள் உள்ளிட்ட நிலுவையிலுள்ள விசாரணைகள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பேரவை தீர்மானித்தது.

நியமத்தரின் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பாக கௌரவ சட்டத்துறைத் தலைமை அதிபதி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளைப் பரிசீலித்த பின்னர், அரசியலமைப்பின் உறுப்புரை 41இ(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் திரு. டபிள்யூ.எல்.ஏ.எஸ். பிரியந்தவை பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிப் பதவிக்கு நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை அங்கீகரித்தது.

4.5. கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவிக்கான நியமனம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவியில் உள்ள வெற்றிடத்துக்கு திரு ஓ.ஆர். ராஜசிங்கவை நியமிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரைகள் 153 மற்றும் 41இ (1) இன் கீழ் கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது. அதன்பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவிக்கு திரு ஓ.ஆர். ராஜசிங்கவை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரை பேரவையால் அங்கீகரிக்கப்படவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவிக்கு நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை, 2025.11.23 முதல் மூன்று (03) மாத காலத்திற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவியில் சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு ஜி.எச்.டி. தர்மபாலவை தற்காலிகமாக நியமிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 41இ (2) இன் கீழ் கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது. அதன்பிரகாரம், இவ்விடயத்தை விரிவாகப் பரிசீலித்து விவாதித்த பின்னர், பேரவையின் ஐந்துக்கும் குறையாத உறுப்பினர்களின் ஆதரவுடன், கௌரவ சனாதிபதி யின் அவ்விதப்புரைக்குப் பேரவை ஒப்புதல் அளிக்கவில்லை.

2025.12.07 முதல் ஆரம்பமாகும் மூன்று (03) மாத காலத்திற்கு சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்னவை கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவியில் தற்காலிகமாக நியமிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 41இ (2) இன் கீழ் கௌரவ சனாதிபதியின் விதப்புரையைப் பேரவை பரிசீலித்தது. இருப்பினும், 2025.12.07 முதல் ஆரம்பமாகும் மூன்று (03) மாத காலத்திற்கு சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்னவை கணக்காய்வாளர் தலைமை அதிபதிப் பதவியில் தற்காலிகமாக நியமிப்பதற்கு கௌரவ சனாதிபதியின் விதப்புரை தொடர்பாக இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பேரவையின் ஐந்துக்கும் குறையாத உறுப்பினர்களின் ஆதரவுடன் பேரவையால் ஒரு முடிவை எடுக்க முடியவில்லை.

5. அரசியலமைப்பைத் தவிர ஏனைய எழுத்துமூலச் சட்டங்களால் அரசியலமைப்புப் பேரவைக்கு விதிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுதல்

5.1. தகவலுக்கான உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

தகவலுக்கான உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களிலிருந்து பேரவை தகுதியானவர்களைத் தெரிவுசெய்து அவர்களை நேர்முகப் பரீட்சசைக்கு அழைத்தது.

வேட்பாளர்களின் தகைமைகளையும் பொருத்தப்பாட்டினையும் பரிசீலித்த பின்னர், தகவலுக்கான உரிமைக்கான ஆணைக்குழுவில் இருந்து நீதிபதி உபாலி அபேரத்ன இராஜினாமாச் செய்தமையினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு நியமிப்பதற்கு, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் உறுப்பினர் பதவிக்கு பேரவை திரு. தயாரத்ன லங்காபுரவினை விதந்துரைத்தது.

5.2. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம் (PUCSL)

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்காக விதந்துரைக்கப்பட்டுப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருடன் பேரவை 2025.07.09 அன்று ஒரு கலந்துரையாடலை நடத்தியது.

பரிசீலித்த பின்னர், அரசியலமைப்பின் 41 உ எனும் உறுப்புரையின் கீழ் ஒரு தீர்மானத்தினை வகுப்பதற்குப் பேரவை தீர்மானித்தது. எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 41உ(4)எனும் உறுப்புரையின் கீழ் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு நியமிப்பதற்காக கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் குறிப்பிட்ட விதப்புரை தொடர்பாக இக்கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த பேரவையின் ஐந்துக்கும் குறையாத உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானமொன்றினை எடுக்க முடியவில்லை.

5.3. பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம்

ஒரு விரிவான மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக குறும்பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு / பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களுக்குப் பேரவை நேர்முகப்பரீட்சையினை நடத்தியது. விண்ணப்பதாரிகளின் பொருத்தப்பாடு, தகைமைகள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றினைப் பரிசீலித்து, நேர்முகப்பரீட்சையிலும் விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் வெளிக்கூறப்பட்டவாறான நிபுணத்துவப் பரப்புக்களுக்கும் உரிய கவனம் செலுத்திய

பின்னர், 2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் 5(2)(அ) எனும் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், பேரவை பின்வரும் விண்ணப்பதாரிகளை 2025.08.07 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் விதந்துரைத்தது:

- கலாநிதி (திருமதி) ரமணி தேவிகா ஜயசுந்தர;
- திருமதி அப்துல் சரூர் சிதாரா ஷிரீன்;
- வைத்தியர் (திருமதி) பத்மா சிறியானி குணரத்ன;
- செல்வி வீரகென்னடிகே ஜயந்தி குரு – உடும்பல; மற்றும்
- கலாநிதி லியனகே கலன சமிந்த குமார் சேனாரத்ன.

மூன்று உறுப்பினர்களை முழு நேர உறுப்பினர்களாக நியமிப்பதற்கான வேண்டுகோள் தொடர்பில் பேரவை பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் பிரிவு 5(5) இன் ஏற்பாடுகளைக் குறிப்பீடு செய்து, முழு நேர உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்காக குறிப்பிட்ட சட்டத்தின் 5(2) ஆ எனும் பிரிவின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட விண்ணப்பாதரிகளினதும், பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ள ஜனஹா செல்வராஸ், சட்டத்தரணி மற்றும் தம்மிக சோமரத்ன, கம்பஹா மாவட்ட "உரிமைகளுக்கான பெண்கள்"சங்கத்தின் நிறைவேற்று உறுப்பினர் மற்றும் பியகம வர்த்தக வலயத்திற்கான தேசிய நிலையத்தின் அமைப்பாளர் ஆகியோரதும் விருப்பத்தினை விசாரித்தது. இதன் பிரகாரம், கலாநிதி (திருமதி) ரமணி தேவிகா ஜயசுந்தர, திருமதி அப்துல் சரூர் சிதாரா ஷிரீன், செல்வி ஜனஹா செல்வராஸ், சட்டத்தரணி ஆகியோர் ஆணைக்குழுவின் முழு நேர உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கான அவர்களின் விருப்பத்தினைத் தெரிவித்திருந்தனர்.

மேற்படி வேட்பாளர்கள் மற்றும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் இரண்டு நியமனதாரர்களின், பொருத்தம், தகுதிகள் மற்றும் திறன்கள், மற்றும் பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் பிரிவு 5 (5) விதிகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மேற்படி சட்டத்தின் பிரிவு 9(1)-இன் விதிகளின்படி, கலாநிதி (திருமதி) ரமணி தேவிகா ஜெயசுந்தரவை தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவராக நியமிக்க சபை, பரிந்துரைத்தது.

5.4. இழப்பீட்டு அலுவலக உறுப்பினர் பதவிக்கான நியமனம்

2025 யூன் 12 முதல் வெற்றிடமாகும், இழப்பீட்டு அலுவலக உறுப்பினர் பதவியை நிரப்புவதற்காகவும், மேலும் 2025 யூலை 06, 2025 ஆகஸ்ட் 25 ஆகிய தேதிகளில் வெற்றிடமாகும் மூன்று (03) பதவிகளை நிரப்புவதற்காகவும் சபை விண்ணப்பங்களைக் கோரியது. அதன்படி, வெற்றிடங்களுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களிலிருந்து தகுதியானவர்களைத் தேர்வுசெய்து, அவர்களைச் சபை நேர்முகப்பரீட்சைக்கு அழைத்தது.

நேர்முகப்பரீட்சையில வெளிப்படுத்திய செயற்திறனையும், இழப்பீட்டு அலுவலகச் சட்டத்தின் பிரிவு 4 (4)-இன் படி பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகுதிகளையும் பரிசீலித்த சபை, பின்வரும் விண்ணப்பதாரிகளை, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 4 (1)-இன் படி இழப்பீட்டு அலுவலக உறுப்பினர் பதவிக்கு நியமிப்பதற்காகக் கௌரவ சனாதிபதிக்கு விதந்துரைக்க முடிவு செய்தது.

- திருமதி வசந்த பெரேரா;
- திரு ஜோசப் டெரன்ஸ் ஞானானந்தன் சுந்தரம்;
- திரு சஞ்சீவ விமலகுணரத்ன; மற்றும்
- திருமதி முகமது அன்சார் மரிக்கார் உம்முல் கைர் நதீஹா.

மேலும், மேற்படி சட்டத்தின் பிரிவு 4 (2)-ன் படி, இழப்பீட்டு அலுவலகத்தின் தவிசாளர் பதவிக்கு நியமிப்பதற்காகக் கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஒழுங்கில், பின்வரும் மூன்று பெயர்களையும் சபை விதந்துரைத்தது:

- திருமதி வசந்த பெரேரா
- திரு ஜோசப் டெரன்ஸ் ஞானானந்தன் சுந்தரம்
- திரு சஞ்சீவ விமலகுணரத்ன

5.5. காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலக உறுப்பினர்கள் பதவிக்கான நியமனம்

காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலக உறுப்பினர் திரு பராக்கிரம ஜயந்த குமார் சில்வ விஜேவன்ச விக்ரமசிங்க அவர்களின் பதவிக்காலம் 2025.10.10 முதல் முடிவடைவதால், அந்த அலுவலக உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காகச் சபை விண்ணப்பங்களைக் கோரியது. அதன்படி, அவ்வெற்றிடத்திற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளிலிருந்து சபை தகுதியானவர்களைத் தேர்வு செய்தது.

5.6. நலன்புரி நன்மைகள் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல்

நலன்புரி நன்மைகள் சபையின் உறுப்பினர் பதவிக்கு திரு. நிமல் கொடவெலகெதர, திருமதி அயந்தி டி சில்வா, கலாநிதி (திருமதி) டி. எம். எஸ். பி. கே. தென்னக்கோன் மற்றும் திரு. சமீர உதயந்த அல்விஸ் ஆகியோரை நியமிப்பதற்கும், செல்வி நூர் ரிஸ்னா அனீஸ் என்பவரை மீண்டும் நியமிப்பதற்குமான கௌரவ அமைச்சரின் விதப்புரைக்குப் பேரவையின் இணக்கத்தைக் கோரி, கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடிதத்தை அரசியலமைப்புப் பேரவை பரிசீலித்தது.

கலந்துரையாடியதன் பின்னர், மேற்குறிப்பிட்ட பரிந்துரைக்கப்பட்டவர்களைப் பேரவையுடனான கலந்துரையாடலுக்கு அழைப்பதெனப் பேரவை தீர்மானித்தது.

அதற்கமைய, பரிந்துரைக்கப்பட்டவர்களின் தகைமைகளைப் பரிசீலித்த பின்னர், 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட தெரிவடிப்படைகளுக்கு இணங்க, திரு நிமல் கொட்டவெலகெதரவைத் தவிசாளராக நியமிப்பதற்கும், திருமதி அயந்தி டி சில்வா மற்றும் (கலாநிதி) திருமதி டி.எம்.எஸ்.பி.கே.தென்னகோ ன் ஆகியோரைஉறுப்பினர்களாக நியமிப்பதற்கும், செல்வி நூர் ரிஸ்னா அனீஸை மீண்டும் உறுப்பினராக நியமிப்பதற்கும் பேரவை இணங்கியது. இருப்பினும் திரு. சமீர உதயந்த அல்விஸ் தொடரகாணப்பட்ட அக்கறை முரண்பாடு காரணமாக, அவரை நியமிப்பதற்கான பரிந்துரைக்கு இணக்கம் தெரிவிக்காதிருக்கப் பேரவை தீர்மானித்தது.

5.7. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் சபை உறுப்பினர் பதவிக்கான நியமனம்

திரு. ராஜிவ் அமரசூரியவின் இராஜினாமாவினால் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் சபை உறுப்பினர் பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு, *2023* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் *8 (2) (*ஆ) மற்றும் *15 (3)* ஆம் பிரிவுகளின் பிரகாரம் திரு. மைத்ரி எவன் விக்ரமசிங்க, சனாதிபதி சட்டத்தரணி அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினையும் திரு. விக்ரமசிங்க, சனாதிபதி சட்டத்தரணி அவர்களின் சுயவிவரத்திரட்டையும் அரசியலமைப்புப் பேரவை பரிசீலித்தது.

அதற்கமைய, இவ்வாறான ஒத்த நியமனங்களை அங்கீகரிப்பதில் பேரவையின் கடந்தகால முன்னுதாரணங்களைக் கருத்திற்கொண்டு, மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 17 ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை உறுதிப்படுத்துவதற்காக சத்தியக்கடதாசி ஒன்றினை அரசியலமைப்புப் பேரவை பெற்றுக்கொண்டது.

விதந்துரைக்கப்பட்டவரின் தகைமை மற்றும் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசி ஆகியவற்றைப் பரிசீலித்த பின்னர், மேற்குறிப்பிட்ட வெற்றிடத்திற்கு திரு. மைத்ரி எவன் விக்ரமசிங்க, சனாதிபதி சட்டத்தரணி. அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையை, அச்சட்டத்தின் 15 (4) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவை அங்கீகரித்தது.

6. பேரவையின் கடமைகள் மற்றும் பணிகளைச் செய்தல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான விதிகளை வகுத்தல்

அரசியலமைப்பின் 41எ (3) எனும் உறுப்புரையினால் பணிக்கப்பட்டுள்ளவாறு, பேரவையானது, அதன் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்குமான வரைபு விதிகளை மீளாய்வு செய்யும் பணியில் அரசியலமைப்புப் பேரவை ஈடுபட்டுள்ளது.

அதற்கமைய, வரைபு விதிகள் தொடர்பில் கௌரவ சட்டமா அதிபரின் அவதானிப்புகளைப் பேரவை பெற்றுக்கொண்டது. அத்துடன், பரஸ்பர மரியாதைக் கோட்பாட்டுக்கு இணங்க, திருத்தப்பட்ட விதிகளை கௌரவ சனாதிபதியின் பரிசீலனைக்காக அனுப்பிவைப்பதற்கும் பேரவை தீர்மானித்தது.

7. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழான தகவல் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல்

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியின் போது, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பின்வரும் எண்ணிக்கையிலான தகவல் கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றதுடன், குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதில்கள் அனுப்பிவைக்கப்பட்டன:

கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை	5
முழுமையாக / பகுதியாகத் தகவல் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	0
மறுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	5
மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	1
பதிலளிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	0
நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	1

8. உறுப்பினர்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுக்கள்

i. SC FR 164/2025